சபரகமுவ மாகாண கல்வி தணைக்களம்

தெஹியோவிற்ற வலயம்

இடர்முகாமைத்துவ கால செயலட்டை

பாட இணைச் செயற்பாடு – 08

தரம் - 02

C . ரூபி ஜெசிந்தா (ஆசிரிய ஆலோசகர்)

## ❖ பழக்கலவை ஒன்றை தயாரித்தல்

01. சூழலில் கிடைக்கும் மூன்று பழங்களை நன்கு மஞ்சள் நீரில் இட்டு கழுவிக் கொள்ளுங்கள். ( உதாரணம் : வாழைஇ பப்பாசிஇ மாம்பழம்)

02. சுத்தம் செய்யப்பட்ட பழங்களில் தோல் அகற்ற வேண்டியவற்றை பெற்றோரின் உதவியுடன் தோலை சீவுங்கள்.

03. ஒரு பெரிய பாத்திரத்தில் பழங்களை சிறிய துண்டுகளாக வெட்டிக்கொள்ளுங்கள்.

04. அவற்றுடன் இரு கரண்டி பால்மா மற்றும் போதுமான அளவு சீனி சேர்த்துக் கொள்ளுங்கள்.

05. பாத்திரத்தில் உள்ள பழக்கலவையை ஒரு கரண்டியின் மூலம் நன்றாக கலந்துக் கொள்ளுங்கள்.

06. பெற்றோருடன் இணைந்து பழக்கலவையை பரிமாறி உண்டு மகிழுங்கள்.

